# JUDICIAL MAGISTRATE COURT NO.II CHENGALPATTU
## CC No.522/2025

## DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.II CHENGALPATTU. |
| Deposition of witness for | : Lw2/ Pw1 |
| Name | : Venkatesan |
| Father/Husband's Name | : Dhayalan |
| Village | : |
| Taluk | : |
| Calling | : |
| Age | : 40 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 02.03.2026.

**Accused present.**

**முதல் விசாரணை:**

நான் தற்போது மறைமலைநகர் காவல்நிலையத்தில் தலைமை காவலராக பணியாற்றி வருகிறேன். கடந்த 13.10.2024 ம் தேதி பகல் 1.00 மணியளவில் ரோந்து பணியாக நானும், உதவி ஆய்வாளர் தினேஷ், சசிகுமார் தலைமை காவலர் ஆகியோர்களுடன் ரோந்து பணியாக மதுவிலக்கு மற்றும் கஞ்சா வேட்டையாக மறைமலைநகரில் உள்ள சுடுகாட்டிற்கு சென்று போது, மேற்சொன்ன உதவி ஆய்வாளர் அவர்களுக்கு ரகசிய தகவல் கிடைத்ததின் பேரில், பகல் 1.00 மணியளவில் சோதனைக்கான உபகரணங்களை எடுத்து கொண்டு, கண்காணித்த போது, ஒரு ஆண் நபர் சந்தேகத்திற்கு இடமாக நின்று கொண்டிருந்தவரை எங்களை பார்த்தவுடன் ஓட முயற்சித்தவரை நாங்கள் மடக்கி பிடித்து விசாரித்த போது, முன்னுக்கு பின் முரணாக கூறியவரை பின்னர் தன் பெயர் ஸ்ரீராம் த.பெ. ராமசந்திரன் என்றும், கூறியவரை தற்போது நீதிமன்ற ஆஜரில் இருக்கும் எதிரியை பிடித்து விசாரணை செய்தோம். பின்னர், மேற்படி, ஆஜர் எதிரியிடம் உதவி ஆய்வாளர் உங்களை சோதனை செய்வதற்கு சாட்சிகளாக குற்றவியல் நீதித்துறை நடுவர் அல்லது அரசிதழ் பதிவு பெற்ற அலுவலர் முன் சோதனை செய்வதற்கு தேவையா என்று கேட்டபோது, அதற்கு எவ்வித ஆட்சேபணையும் தெரிவிக்காமல் நீங்களே சோதனை செய்யும்படி அனுமதி கொடுத்ததின் பேரில், உதவி

ஆய்வாளர் எதிரி ஸ்ரீராம் என்பவரை சோதனை செய்த போது, அவர் வைத்திருந்த brown colour பிளாஸ்டிக் பேக்கில் வைத்திருந்த எடை போட்டு பார்த்தபோது, 100 கிராம் அளவு கொண்ட கஞ்சாவை பச்சை நிறத்தில் ஒருவித நெடியுடன் கூடிய துர்வாசத்தில் இருந்ததை குறித்து கேட்டபோது, அரசால் தடை செய்யப்பட்ட கஞ்சாவை விற்பதற்காக வைத்திருப்பதாக சொன்னார். அப்போது உதவி ஆய்வாளர் உரிய காரணம் கூறி, ஆஜர் எதிரியை கைது செய்தபோது, எதிரி தான் வைத்திருந்த 100 கிராம் அளவு கொண்ட கஞ்சாவை உதவி ஆய்வாளர் அவர்களிடம் எடுத்து கொடுக்க, அதை கைப்பற்றுதல் மகசர் தயார் செய்து கைப்பற்றினார். அதற்கு நானும், தலைமை காவலர் சசிகுமார் என்பவரும் சாட்சிகளாக இருந்து கையொப்பம் செய்தோம். என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள 2வது கையெழுத்து என்னுடையது தான். அது அதசா.ஆ1 ஆக குறயீடு செய்யப்படுகிறது. பின்னர், எதிரி மற்றும் வழக்கு சொத்துகளுடன் நிலையம் சேர்ந்து, எதிரியின் மீது NDPS சட்டத்தின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார். வழக்கு சம்பந்தமாக உதவி ஆய்வாளர் விசாரணை செய்தார்.

**குறுக்கு விசாரணை:**

எத்தனை மணிக்கு ரகசிய தகவல் உதவி ஆய்வாளருக்கு கிடைத்தது என்றால் பகல் 12.30 மணியளவில் கிடைத்தது. சம்பவ இடம் செல்லும் போது பொது நாட்குறிப்பில் குறிப்பு வைத்து உத்தரவை பெற்று தான் சென்றோமா என்றால் உதவி ஆய்வாளர் குறிப்பு வைத்துவிட்டு உத்தரவை பெற்றார். காவல்நிலையத்திலிருந்து எத்தனை நபர்கள் சென்றோம் என்றால் 3 நபர்கள் சென்றோம். எந்த உபகரணங்களை எடுத்து கொண்டு சம்பவ இடம் சென்றோம் என்றால் கார்பன் பேப்பர், வெள்ளை தாள், மெழுகு, சீல் பாலீத்தீன் பேப்பர், அரக்கு, ஆகியவற்றை எடுத்து சென்றோம். இதை தவிர வேறு எந்த பொருளும் எடுத்து செல்லவில்லை. ஆஜர் எதிரியிடமிருந்து 100 கிராம் கஞ்சா கைப்பற்றப்பட்டது. அதை மிஷினில் எடை போட்டு பார்த்தோம். கஞ்சா பொருளை சோதனை செய்வதற்கான கடிதத்தை உதவி ஆய்வாளர் சம்பவ இடத்தில் வைத்து எழுதினார். கைப்பற்றப்பட்ட பொருள் கஞ்சா என்பதை எவ்வாறு உறுதி செய்தோம் என்றால் கொலுத்தி பார்த்து, முகர்ந்து பார்த்து தெரிந்து கொண்டோம். எவ்வளவு அளவு எடுத்து உறுதி செய்தோம் என்றால் சிறிய அளவு எடுத்தோம். மகசரை தவிர வேறு ஆவணங்களில் கையெழுத்து போட்டேனா என்றால் ஒப்புதல் வாக்குமூலத்தில் கையெழுத்து போட்டேன். நான் கையெழுத்திட்ட ஆவணத்தில் எழுதியிருந்தது, அதசா.ஆ1 தட்டச்சு செய்யப்பட்ட ஆவணத்தில் நான் கையெழுத்து போட்டுள்ளேன்

என்றால் நான் எழுதிய ஆவணத்தில் தான் கையெழுத்து போட்டேன். ஆஜர் எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றாலும், உயர் அதிகாரியின் உத்தரவின் பேரில், வழக்கிற்கு தேவையான ஆவணங்களை காவல்நிலையத்தில் வைத்து தயார் செய்து, அதில் கையெழுத்து போட்டேன் என்றால் சரியல்ல. கஞ்சாவை அளவு செய்த போது, அதன் எடை குறைந்திருக்கும் என்றால் இல்லை. பேப்பரின் எடையும் சேர்ந்திருக்கும். ஆஜர் எதிரி எடுத்து வந்த கவரில் தான் பேக் செய்யப்பட்டது. அதை உதவி ஆய்வாளர் பேக் செய்தார்.

மறு விசாரணை இல்லை.

Typewritten to my dictation in open court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

sd/-S.Sahaana
Judicial Magistrate No.II,
Chengalpattu.